## மஹாவெலி வென்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பனி – 2017

மஹாவெலி வென்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதப்படும் மீளாய்வாண்டின் கம்பனியின் செயற்பாடு தொடர்பிலான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் 8.5 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.8 மற்றும் 3.9 ஆம் பிரிவுகள் மற்றும் 4 ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் கலைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கம்பனியின் அனைத்து சொத்துக்களினதும் தேறிய இற்றைப் பெறுமதி நடைமுறை சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், சொத்துக்களின் பதிவழிக்கப்பட்ட பெறுமதி நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் ரூபா 958,625 ஆன போதிலும், வருமானக் கூற்றில் அது ரூபா 1,115,932 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 157,307 இனால் வட்டி வருமானம் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்திலேயே அதற்குரிய வட்டி பிற்போடப்பட்டுள்ள போது பெற வேண்டிய வட்டியாக ரூபா 174,924 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. அதேபோல் முன்னர் கிடைத்த வட்டி வருமானமான ரூபா 168,410 தொகை பொறுப்புக்களாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் ரூபா 177,833 ஆன போதிலும், அது ரூபா 171,533 ஆக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) பின்வரும் கணக்கு விடயங்களின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிராமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வுக்கு உட்படுத்துவதற்கு அல்லது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| அலுவலக உபகரணங்கள் - கிரயம் | 1,351,280 | நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள், பட்டோலைகள், பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் - கிரயம் | 154,179 | |
| இயந்திர உபகரணங்கள் | 162,885 | |
| கட்டிடங்கள் | 62,098 | |
| மோட்டார் வாகனங்கள் | 116,303 | பதிவு செய்யும் சான்றிதழ் வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றிதழ் |
| சிங்கர் தையல் இயந்திர இருப்பு | 29,480 | பெறுமதி மற்றும் பௌதீக உள்ளதன்மையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் |
| நிகழத்தக்க வியாபாரக் கடனுக்கான நிதியேற்பாடு | 1,944,933 | கடன் ஆவணங்கள், கடன் பட்டியல் கடனை பதிவழிப்பதற்கான அங்கீகாரம் |
| ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழுவின் செயற்திட்ட கூறுக்கான அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் ஒதுக்கம் | 1,368,863 | |
| செயற்திட்ட கடனுக்கான அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் ஒதுக்கீடு | 1,952,190 | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் (டொலமயிட் செயற்திட்டம்) | 310,025 | மீதி உறுதிப்படுத்தல் ஆவணங்கள் |
| கூறப்பட்ட மூலதனம் | 10,398,000 | பங்குச் சான்றிதழ் |
| ஒதுக்கம் | | |
| ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு | 10,000,000 | ஒதுக்கங்களை கணக்கு வைப்பதற்குரிய சான்றுகள் |
| ஏனைய | 150,325 | |

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதன் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை நான் தெரிவிக்கவில்லை.

**2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

அ. கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

ஆ. கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படவில்லை என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 பெற வேண்டிய கணக்குகள்**

நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,000,473 பெறுமதியான பெற வேண்டிய 04 கடன் மீதிகளை அறவிடுவதற்கும் ரூபா 460,708 பெறுமதியான செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகள் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 42(1) பிரிவின் பிரகாரம் ரூபா 100 தொகையான சாதாரண பங்குகளால் கம்பனியின் மூலதனம் கொண்டிருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்த கம்பனியின் அகவிதிப் பத்திரத்தின் பிரகாரம் கூறப்பட்ட மூலதனம் ரூபா 10 படியான 3,000,000 பங்குகளை கொண்டிருந்தது. அவற்றுள் 1,039,800 பங்குகள் இலங்கை மஹாவலி அதிகாரசபைக்கும், 03 பங்குகள் இலங்கை மஹாவலி அதிகாரசபைக்கும், 03 பங்குகள் மற்றொரு வெளிவாரி நபர்களின் பெயருக்கும் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், வெளிவாரி தரப்பினருக்கு வெளியிடப்பட்டிருந்த பங்குகளின் அளவானது நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய மீளாய்வாண்டின் போது கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 990,740 ஆன இலாபமாவதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 786,671 ஆனமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 204,069 தொகையான அதிகரிப்பொன்றினை காண்பித்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 207,395 இனால் அதிகரித்தமை மேற்ப நிதி விளைவுகளிலான அதிகரிப்பிற்கு பிரதானமான காரணமாக அமைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

2012 ஆகஸ்ட் 13 ஆந் திகதி இடம்பெற்ற பகிரங்க முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற செயற்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் அந்த ஆண்டின் திசெம்பர் மாதத்தின் இறுதியில் கம்பனி தன்னிச்சையாக கணக்குகளை தீர்ப்பனவு செய்து முடிவுறுத்துவதற்கு 2012 செப்தெம்பர் 28 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் போது இலங்கை மஹாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. அதற்கமைய 2014 நவம்பர் 20 ஆந் திகதிய விசேட பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியை கலைப்பதற்காக கலைப்பவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார், அதற்கமைய, 2014 ஒக்தோபர் 21 ஆந் திகதி கலைத்தல் நடவடிக்கைகள் மற்றும் கணக்குகளை தயாரிப்பதற்காக ரூபா 125,000 தொகை செலுத்துவதற்கு இணங்கி அவற்றுள் 50 சதவீதமான ரூபா 62,500 தொகை 2015 சனவரி 10 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், கம்பனி கலந்துரையாடலில் கணக்கு தீர்க்கப்பட்டு மூடிவிடுவதற்கு ன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் கடன் கொடுத்தோரின் கணக்குகள் தீர்க்கப்பட்டு முடிவுறுத்தலாக அமைந்திருந்ததாக கம்பனிகளை பதிவு செய்யும் திணைக்களத்தின் இலக்கம்: பீடீ/9854 மற்றும் 2016 யூலை 25 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. அந்த கடிதத்தின் பிரகாரம் கடன்பட்டோரின் கூட்டமொன்று நடாத்தப்பட்டு எஞ்சிய பணிகளை மேற்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறானதொரு கூட்டம் நடாத்தப்பட்டடைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததுடன், 2019 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் கம்பனியை கலைக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளய்வாண்டில் கணக்குகளை தயாரிப்பதற்காக மீண்டும் ரூபா 38,500 செலுத்த வேண்டிய கணக்குகளின் தயாரிப்புக் கட்டணமாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், கலைத்தல் கட்டணங்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் கட்டணங்களை செலுத்துவதற்காக பெற்றுக்கொண்ட அங்கீகாரமும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுகளை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் கண்ககாய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எனினும், கம்பனியின் கலைத்தல் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 நவம்பர் 07 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 நவம்பர் 07 ஆந் திகதி கணக்காய்விற்காக முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.